**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 19.09.2024 |
| Case No. | : **O.S.7/2019** | Nationality | : Indian |
| Name | : பசுபதி | Religion | : |
| Father's/Husband's Name | : அழகப்பிள்ளை | Age | : 78 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 71/2 ஆகும். எனது தகப்பனார் அழகப்பபிள்ளைக்கு ஜெயலெட்சுமி மூலமாக நான் பிறந்தேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் துரை (எ) துரைராஜ் என்றால் சரிதான். மேற்படி துரைராஜ் அழகப்பபிள்ளையின் மற்றொரு மனைவி கனகாம்பாளுக்கு பிறந்தவர் என்றால் சரிதான். கனகாம்பாள் அழகப்பிள்ளைக்கு தாலி கட்டாத மனைவி ஆவார். கனகாம்பாளுக்கு 6 ஆண்வாரிசுகளும் 4 பெண் வாரிசுகளும் உள்ளார்கள் என்றால் சரிதான். அழகப்பிள்ளைக்கு 5 குழந்தைகள் பிறந்த பின்னர்தான் ஜெயலெட்சுமியை திருமணம் செய்து கொண்டார் என்றால் அது எனக்கு தெரியாது.

2. அழகப்பிள்ளைக்கு எத்தனை குழந்தைகள் பிறந்த பிறகு எனது தாயாரை திருமணம் செய்து கொண்டாடார் என்றால் 2 பிள்ளைகளை பிறந்த பிறகு திருமணம் செய்து கொண்டதாக கூறுவார்கள். நான் சொல்லுகிற 2 குழந்தைகளில் துரைராஜ் என்பவர் ஒருவர் என்றால் சரிதான். அழகப்பிள்ளைக்கு கனகாம்பாள் என்ற மனைவி இருக்கும்போது

ஜெயலெட்சுமியை திருமணம் செய்து கொண்டாடார் என்றால் கனகாம்பாள் அழகப்பிள்ளையின் மனைவி இல்லை. சேர்மானம் ஆவார். அழகப்பிள்ளைக்கு கனகாம்பாள்தான் மனைவி என்றாலும் ஜெயலெட்சுமிதான் சேர்மானம் என்றாலும் சரியல்ல.

3. கனகாம்பாளை சேர்மானம் என்று கூறுவதற்கு என்ன ஆதாரம் உள்ளது என்றால் கனகாம்பாள் அந்த காலகட்டத்தில் தேவதாசியாக இருந்தார். அழகப்பிள்ளைக்கு வைப்பாட்டியாக இருந்தார். கனகாம்பாள் தேவதாசியாக இருந்தவரை அவருக்கு எவ்வாறு 10 குழந்தைகள் பிறந்தது என்றால் அழகப்பிள்ளை நிரந்தரமாக வைத்திருந்ததால் அவருக்கு 10 குழந்தைகள் பிறந்தது. அழகப்பிள்ளைக்கு நான் வாரிசாக இருக்கும்போது துரைராஜ் என்பவரும் அழகப்பிள்ளையின் வாரிசு என்றால் இல்லை. அவர் கனகாம்பாளின் வாரிசு ஆவார். நான் ஜெயலெட்சுமியின் வாரிசு என்றாலும் துரைராஜ்தான் அழகப்பிள்ளையின் வாரிசு என்றாலும் சரியல்ல. அழகப்பிள்ளை இறந்தபோது அவருக்கு கொள்ளி வைக்கவோ இதர சடங்குகள் செய்யவோ ஜெயலெட்சுமியின் வாரிசுகள் அனுமதிக்கப்படவில்லை என்றால் சரிதான். துரைராஜ் எங்களை அனுமதிக்கவில்லை.

4. அழகப்பிள்ளையின் முதல் மனைவி கனகாம்பாளை மறைத்து எனது தாயார் மட்டுமே வாரிசு என பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அழகப்பிள்ளைக்கு முதல் மனைவி கனகாம்பாள் என்றாலும் ஜெயலெட்சுமி இரண்டாவது மனைவி என்றாலும் சரியல்ல. நான் அசல் வழக்கு எண் 223/1999 என வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பினர்கள் அல்ல என்றால் சரிதான். அவர்களின் தகப்பனார் துரைராஜ் என்பவர் தரப்பினராக இருந்தார். அதனால் அந்த வழக்கு இந்த பிரதிவாதிகளை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. கட்டுப்படுத்தும். அந்த வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பினர்கள் இல்லை என்பதால் அதில் ஏற்பட்டுள்ள தீர்ப்பாணைக்கு

பிரதிவாதிகளுக்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு சம்மந்தம் இல்லாத தீர்ப்பாணையை வைத்துக்கொண்டு அவர்களிடமிருந்து சுவாதீனம் எடுத்துக் கொண்டதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. தீர்ப்பாணை காலத்திலிருந்து தற்போது வரை தாவா சொத்தின் சுவாதீனம் 1ம் பிரதிவாதியிடம் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்து ஒருபோதும் எனது சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவத்தில் இருந்து வருவது என்பதை காட்டுவதற்கு என்ன ஆதாரம் உள்ளது என்றால் ஆவணங்களை நீதிமன்றத்தில் கொடுத்துள்ளோம். நான் எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் ஆவணங்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதியிடம் உள்ளது என்றாலும் சரியல்ல.

5. நான் அசல் வழக்கு 223/1999 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி தாவா சொத்தினை சுவாதீனம் எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும் அன்றைய தேதியில் தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி நெல் சாகுபடி செய்து வந்தார் என்றாலும் சரியல்ல. அதன் பிறகு 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் கரும்பு மற்றும் எள் சாகுபடி செய்து வந்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனக்கு எதிராக அசல் வழக்கு எண் 97/2003 வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றாலும் நான் அவருக்கு எதிராக அசல் வழக்கு எண் 2/2004 வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றாலும் சரிதான். மேற்படி 2 வழக்குகளிலும் மேல்முறையீடு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல, தள்ளுபடி ஆகிவிட்டது. அவ்வாறு தள்ளுபடி ஆனதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. தாவா சொத்திற்கு வடபுறமுள்ள அரிசி ஆலை மற்றும் கடைகளினால் தாவா சொத்திற்கு இடையூறு எதுவும் உள்ளதா என்றால் 1ம் பிரதிவாதி அதன் மூலமாக தாவா சொத்தினை ஆக்கிரமிக்க முயற்சித்து வருகிறார். 1ம் பிரதிவாதிக்கு எதிராக காவல்துறையில் நான் புகார் எதுவும் அளித்துள்ளேனா என்றால் புகார் அளித்துள்ளேன்.

வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை. நான் அவ்வாறு புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 07.07.2007 ம் தேதி என்ன நடந்தது என்றால் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் மண் கொட்டினார். 1ம் பிரதிவாதி விவசாய நிலமான தாவா சொத்தில் எதற்காக மண் கொட்டினார் என்றால் தாவா சொத்துடன் சேர்ந்த விவசாய நிலத்திற்கு முன்புறம் மண் கொட்டினார். 1ம் பிரதிவாதி மண் கொட்டி கட்டிடம் கட்டினாரா என்றால் நான் அதை தடுத்துவிட்டேன்.

7. அதற்காக காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளித்தேனா என்றால் புகார் அளித்துள்ளேன். தாவா சொத்திற்கு தென்புறம் 1ம் பிரதிவாதியின் சாகுபடி நிலம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்குபுறம் சின்னப்பபிள்ளை என்பவரின் நிலம் உள்ளது என்றாலும் அதில் 1ம் பிரதிவாதி குத்தகை சாகுபடி செய்து வருகிறார் என்றாலும் சின்னப்பபிள்ளை நிலம் உள்ளது அதில் வேறு ஒருவர் குத்தகை சாகுபடி செய்து வருகிறார். தாவா சொத்திற்கு கீழ்புறம் என்ன உள்ளது என்றால் ரோடு உள்ளது. தாவா சொத்தினை சுற்றி எனக்கு சொந்தமாகவோ குத்தகை சாகுபடி செய்யும் சொத்தோ இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் சாகுபடி செய்து கிராம நிர்வாக அலுவலர் சான்று பெற்றுள்ளார் என்றாலும் கரும்பு சாகுபடி செய்து கரும்பு ஆலையில் சாகுபடிக்காக பதிவு செய்துள்ளார் என்றாலும் சரியல்ல.

8. தாவா சொத்து சம்மந்தமாக 1ம் பிரதிவாதி வருவாய் நீதிமன்றத்தில் எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் வழக்கு தாக்கல் செய்தார். அது தள்ளுபடி ஆகிவிட்டது. அதற்கு ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி குத்தகைதாரராக 25 வருடங்களாக சாகுபடி செய்து வருகிறார் என்றாலும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் 10/69, 25/55, 24/56 ஆகிய சட்டங்களின்படி குத்தகைதாரர் என்ற முறையில் பாதுகாப்பு உள்ளது

என்றாலும் சரியல்ல. அவர் குத்தகைதாரர் அல்ல. மேற்படி சட்டங்கள் அவருக்கு பொருந்தாது. 1ம் பிரதிவாதி வருவாய் நீதிமன்றத்தில் எனக்கு எதிராக 19/2001 என வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் இவ்வழக்கினை விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றத்தில் அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

9. 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் கட்டிடம் கட்ட முயற்சித்ததற்கு கட்டிடத்திற்கான வரைபடம் எதுவும் தயார் செய்திருந்தாரா என்றால் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் ஆக்கிரமிக்க முயற்சி செய்தார் நாங்கள் அதை தடுத்துவிட்டோம். என்னால் சுவாதீனம் எடுக்கப்பட்ட தாவா சொத்தைப் பொறுத்து உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர வேண்டிய அவசியம் என்னவென்றால் 1ம் பிரதிவாதி ஆக்கிரமிக்க முயற்சி செய்ததால் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரினேன். 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் கட்டிடம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் அதற்காக 1ம் பிரதிவாதி பஞ்சாயத்தில் உரிமம் மற்றும் பிளான் அப்ரூவல் பெறவில்லை என்றாலும் சரியல்ல. தாவா வழக்குரை கற்பனையாக தயார் செய்யப்பட்டு வீணாக வம்பு செய்வதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகள் என்னால் கற்பனையாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு நான்கு புறமும் உள்ள சொத்துகள் 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

10. புல எண் 70/1 நஞ்சை நிலம் என்றால் சரிதான். அது 1ம் பிரதிவாதிக்கு சொந்தம் என்றால் சரியல்ல. வேறு யாருக்கு சொந்தம் என்றால் சின்னப்பபிள்ளைக்கு சொந்தமாகும். மேற்படி புல எண் கனகாம்பாளுக்கு சொந்மானது என்றால் சரியல்ல. என்னுடன் பிறந்த வேணு அம்மாளுக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் 1 மகன் மற்றும் 1 மகள் ஆகும்.

அவர்கள் தற்போது உயிருடன் உள்ளார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் எனக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் வேண்டும் என்றே பிரதிவாதிகளுக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காக தொடர்ந்து பல வழக்குகள் தாக்கல் செய்து வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/-N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.